ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2181/21 - 2020 ජූනි මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.06.25

*2181/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 58 ஆம் பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.

கொழும்பு,
2020, யூன் 08.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலார்கள் பற்றிய இடாப்பு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையானது, (இதனகத்துப் பின்னர் "இடாப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் வேறெவரேனும் உயர் தொழிலர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

3. இடாப்பானது நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலர்கள் பற்றி பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பெயர்கள் ;

(ஆ) தொடர்பு விபரங்கள் ;

(இ) தேர்ச்சிகள் இயைபான எந்த உயர் தொழிலில் அல்லது தொழிலில் அல்லது கைவினைத் தொழிலில் உள்ளனவோ அந்த இயைபான உயர் தொழில் அல்லது தொழில் அல்லது கைவினைத் தொழில் ;

(ஈ) பதிவு செய்யப்பட்ட வகுதியும் விசேடித்த துறையும் ;

(உ) பதிவிலக்கம் ; அத்துடன்

(ஊ) பதிவுத் திகதியும் நடப்புப் பதிவுக் காலப்பகுதியும்.

4. இடாப்பானது, நிர்மாணத் தொழிலில் தேர்ச்சிபெற்ற நிர்மாண வேலையாளர்கள், நிர்மாண அமைவிட மேற்பார்வையாளர்கள், நடுமட்டத் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் ஏனைய உயர் தொழிலர்கள் பற்றிய விபரக்கொத்து ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் அலுவலக நேரங்களின் போது பொது மக்களினால் பார்வையிடவும்படலாம்.

5. இவ்வொழுங்குவிதிகளில்-

"நிர்மாணத் தொழிலிலுள்ள ஏனைய உயர் தொழிலர்கள்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்திற் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமைபெற்ற ஆளொருவர் தவிர, இயைபான உயர் தொழிற்சார் குழுவின் கீழ் உயர் தொழில் ரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்.

07-251